கூடுதல் மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம் மற்றும்
கூடுதல் சார்பு நீதிமன்றம் தென்காசி,
முன்னிலை. திருமதி.என்.மாரீஸ்வரி எம்.ஏ,எம்.எல்,
கூடுதல் மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயர்
மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி,

**2022ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14ம் நாள் புதன்கிழமை**

எம்.சி.ஓ.பி.எண்.260-2021

TNTLof 100001782021

பீர்முகம்மது .. மனுதாரர்

/எதிர்/

1.ராஜா

2.யுனைடெட் இந்தியா இன்சுரன்ஸ் கம்பெனி
லிமிடெட், நாமக்கல்

3.செய்யது அலி

4.யுனைடெட் இந்தியா இன்சுரன்ஸ் கம்பெனி
லிமிடெட், தென்காசி. .எதிர்மனுதாரர்கள்

மோட்டார் வாகனச் சட்டப்பிரிவு 140,166-பிரிவின் கீழ் இழப்பீடாக ரூ.5,00,000/--ம் கோரி இம்மனு 11.09.2017-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவானது 17.08.2022 அன்று என்முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தப்போது மனுதாரர் தரப்பில் திரு.கே.இசக்கித்துரை மற்றும் திரு.எஸ்.சண்முகவேல் வழக்கறிஞர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் அழைத்தும் வருகையில்லாததால் அவர்களை ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை எனது பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>உத்தரவு</u>

மோட்டார் வாகனச் சட்டப்பிரிவு 140,166- பிரிவின் கீழ் இழப்பீடாக ரூ.5,00,000/-ம் கோரி இம்மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்.</u>

மனுதாரர் 28.05.2017 அன்று காலை 07.00 மணி அளவில் 3ம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட டி.என்76.எ.சி.8170 என்ற பொலிரோ பிக்கப்வேனின் ஓட்டுநராக இருந்து மேற்படி வாகனத்தை கவனமாகவும் நிதானமான வேகத்திலும் திருநெல்வேலி தூத்துக்குடி மெயின் ரோட்டில் வாகைகுளம் கிராமத்திற்கு அருகில் ஓட்டிச் சென்று கொண்டிருந்தபோது எதிரே 1ம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட லாரியை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து மனுதாரர் ஓட்டிச் சென்ற பொலிரோ பிக்கப்வேனின் மீது மோதியதில் மேற்படி பொலிரோ பிக்கப்வேனின் முன்பகுதி சேதம் அடைந்தது. மேற்படி விபத்து சம்பந்தமாக 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு எதிராக புதுக்கோட்டை காவல்நிலைய குற்ற எண். 205/2017 இதச 279,337 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு மேற்படி வழக்கு தூத்துக்குடி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. எனவே 1ம் எதிர்மனுதாரரின் லாரி 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ளதால் மனுதாரரின் லாரிக்கு ஏற்பட்ட சேதத்திற்கு எதிர்மனுதாரர்கள் ரூ.5,00,000/-ம் நஷ்ட ஈடு கொடுக்க கோரி மனுதாரரால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3.எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை.</u>

4 .இந்த மனுவில் மனுதாரர் தரப்பில் ம.சா.1. விசாரிக்கப் பட்டு ம.சா.ஆ.1. முதல் 10 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4.இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் பின்வருமாறு

| | |
|---|---|
| 1. | விபத்தானது யாருடைய அதிவேகம் மற்றும் கவனக் குறைவால் ஏற்பட்டுள்ளது.? |
| 2. | மனுதாரரின் சேதமடைந்த வாகனததிற்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கத்தக்கதா? கிடைக்கத்தக்கதெனில் எவ்வளவு? |
| 3. | மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையை யார் செலுத்தக் கடமைப்பட்டவர்கள்? |

5.பிரச்சனை 1-க்கான தீர்வு .

மனுதாரரின் மனுவானது , மனுதாரர் 3ம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட பொலிரோ பிக்கப் வேனின் ஓட்டுநராக இருந்து மேற்படி வாகனத்தை துாத்துக்குடி திருநெல்வேலி மெயின் ரோட்டில் வாகைகுளம் கிராமத்திற்கு அருகில் கவனமாகவும் நிதானமான வேகத்திலும் ஓட்டிச் சென்று கொண்டிருந்தபோது எதிரே 1ம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட லாரியை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து மனுதாரர் ஓட்டிச் சென்ற பொலிரோ பிக்கப் வேனின் மீது மோதியதில் மனுதாரர் பொலிரோ பிக்கப் வேனுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. மேற்படி சேதாரத்திற்கு ரூ.5,00,000/-ம் எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்க கோரி இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் ஒருதலைபட்சமாகியுள்ளார்கள். எதிருரையும் தாக்கல் செய்யப்படவில்லை.

6. இந்நிலையில், மனுதாரர் தரப்பில் ம.சா.1. விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ. 1 முதல் 10 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1. ஆக முதல்தகவல் அறிக்கை குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதனை பரிசீலனை செய்கையில், 1ம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட லாரியை அதன் ஓட்டுநர்

அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து மனுதாரர் ஓட்டிச் சென்ற பொலிரோ பிக்கப் வேனின் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்ட போதிலும் அதனை மறுத்துரைக்கும் வகையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்யாமலும், 1ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகாமலும் ஒருதலைபட்சமாகியுள்ளார் என்பது தெளிவாகிறது. மேலும் ம.சா.ஆ.8 ஆக விபத்திற்குள்ளான லாரியின் போட்டோ நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விபத்தின் காரணமாக முன்பக்கம் அதிக சேதாரம் ஏற்பட்டுள்ளது காணமுடிகிறது. எனவே விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவால் நடைபெற்றுள்ளதாக பிரச்சனை 1க்கு தீர்வு காணப்படுகிறது.

7. பிரச்சனை 2 -க்கான தீர்வு.

விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவால் நடைபெற்றுள்ளதாக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் மனுதாரருக்கு கிடைக்ககூடிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு என நிர்ணயம் செய்யப்பட வேண்டியது அவசியமாக உள்ளது. விபத்தில் சேதம் அடைந்த பொலிரோ பிக்கப்வேனின் உரிமையாளர் 3ம் எதிர்மனுதாரர் என்பதும் , 3ம் எதிர்மனுதாரரிடமிருந்து மனுதாரர் 20.02.2017 தேதியில் கிரையம் பெற்றுள்ளார் என்பதும் ம.சா.ஆ.3 ஆன பொலிரோ பிக்கப் வேனின் பதிவுச்சான்று மூலம் அறியமுடிகிறது. இந்நிலையில் விபத்தில் சேதம் அடைந்த வாகனத்தை ஆய்வு செய்து சர்வேயர் கொடுத்த அறிக்கை ம.சா.ஆ.7 ஆக மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சர்வேயர் விபத்தில் சேதம் அடைந்த பொலிரோ பிக்கப் வேனை ஆய்வு செய்து மேற்படி பொலிரோ பிக்கப் வேனுக்கு உத்தேசமாக ரூ.3,61,769/- சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேற்படி சர்வேயர் அரசால் நிர்ணயிக்கப்பட்ட சர்வேயரா என்பது குறித்து மனுதாரர் தரப்பில் தெளிவு இல்லை. மேலும் ம.சா.ஆ.7 அறிக்கையை கொடுத்த சர்வேயர் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க மனுதாரர் தரப்பில் யாதொரு நடவடிக்கையும்

மேற்கொள்ளப்படவில்லை. மேலும் திருநெல்வேலி மகேந்திரா கம்பெனியில் இருந்து சேதம் அடைந்த லாரியை சரி செய்வதற்கு ரூ.4,63,991/- செலவு ஏற்படும் என கொட்டேசன் மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கொட்டேசன் அடிப்படையில் விபத்தில் சேதம் அடைந்த லாரிக்கு ம.சா.ஆ.9 ஆவணத்தின் அடிப்படையில் ரூ.4,63,991/- செலவு செய்யப்பட்டதாக கருத இயலாது. மேலும் சேதமடைந்த வாகனம் மனுதாரரால் புதிதாக வாங்கப்பட்ட வாகனம் அல்ல என்பதும் 2015ம் ஆண்டு பழை மாடல் வாகனம் என்பதும் தற்போது பொலிரோ பிக்கப் வேன் உற்பத்தி நடைமுறையில் இல்லை என்பதும் 20.02.2017 தேதியில் மனுதாரருக்கு 3ம் எதிர்மனுதாரர் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

இந்நிலையில், மேற்கண்ட இரண்டு வருட கால இடை வெளியில் மேற்படி பொலிரோ பிக்கப் வேனுக்கு எவ்வளவு (depreciation) தேய்மானம் ஏற்பட்டுள்ளது என்பது குறித்தும் எந்தவித அறிக்கையும் மனுதாரர் தரப்பில் தாக்கல் இல்லை. மேலும் விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவால்நடைபெற்று 1ம்எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டபோதிலும் 1ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டுக்கழகமான 2ம்எதிர்மனுதாரரிடம் மேற்படி விபத்து குறித்து தெரிவிக்கப்பட்டதா? அல்லது மேற்படி விபத்தின் காரணமாக 2ம் எதிர்மனுதாரரிடமிருந்து மனுதாரர் சேதாரத்திற்கு தொகை பெற்றுள்ளாரா? என்பது போன்ற விவரங்கள் எதுவும் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்படவில்லை.

இத்தகைய நிலையில், மனுதாரரின் வாகனம் விபத்தின் காரணமாக சேதம் அடைந்துள்ளதும், மேற்படி சேதாரத்திற்கு புதிய பொருட்களை வாங்கி பொருத்தினால்தான் மேற்படி பொலிரோ பிக்கப் வேன் பழைய நிலைக்கு வரும் என்பதும் மனுதாரர் தரபபு வாதம் என்றாலும் தற்போது மனுதாரர் கூறும் வாகனம் சந்தை

பயன்பாட்டில் இல்லை என்ற நிலையில், மனுதரா் தரப்பு சேதமடைந்த வாகனத்தின் புகைப்படத்தினை பார்க்கையில் முற்றிலும்சேதமடைந்த வாகனம் சரி செய்ய முடியாத கண்டம் செய்யத்தக்க வாகனம் என்ற நிலையில் மனுதாரர் சேதம் அடைந்த பொலிரோ பிக்கப் வேனை சரி செய்வதற்காக ரூ.5,00,000/-ம் இழப்பீடு கோரியுள்ளது ஏற்கத்தக்கது அல்ல என்றும் இந்நீதிமன்றம் இறுதி செய்கிறது.

மேலும், சர்வேயர் லாரியை ஆய்வு செய்து உத்தேசமாக வழங்கப்பட்ட ம.சா. ஆ.7 கண்ட தொகையான ரூ.3,61,769/- தொகையை எவ்வாறு நிர்ணயம் செய்தார், மேற்படி சர்வேயர் அரசு தரப்பில் நிர்ணயிக்கப்பட்ட சர்வேயரா? என்பது குறித்தும் மனுதாரர் தரப்பில் எந்தவித விளக்கமும் இல்லாத நிலையிலும், Quotation ஆவணத்தை மட்டும் அடிப்படையாக கொண்டு விபத்தில் ஈடுபட்ட வாகனத்திற்கு ரூ.4,63,991/- செலவு ஏற்படும் எனக்கூறும் மனுதாரர் தரப்பு வாதமும் ஏற்புடையது அல்ல எனவும், இந்நீதிமன்றம் இறுதிசெய்கிறது. இந்நிலையில், சேதம் அடைந்த வாகனம் கிரையம் பெற்ற வருடம் மற்றும் வாகனத்தின் சேதாரம்,போன்றவற்றையும் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பாலிசி நகலையும் தாக்கல் செய்யாத நிலையில், மோட்டார்வாகன ஆய்வாளர் அறிக்கையில் பாலிசி நிலுவையில் உள்ளதாக இருப்பதை இந்நீதிமன்றம் கருத்தில்கொண்டு மனுதாரர் தனது வாகனத்தின் சேதத்தை நினைத்து வேதனைக்கு மதிப்பீடு செய்ய இயலாது என்றாலும் மனுதாரர் மனவேதனையை கருதில் கொண்டு ரூ.50,000/-ம் இழப்பீடாகவும் வாகனத்தின் சேதார இழப்பிற்காக ரூ.1,50,000/-ம் என மொத்தம் ரூ.2,00,000/-ம் இழப்பீடாக கிடைக்கத்தக்கது என பிரச்சனை 2 க்கு தீர்வு காணப்படுகிறது.

8. பிரச்சனை 3 க்கான தீர்வு .

விபத்தானது 1ம்எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவால் நடைபெற்றுள்ளதாலும் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் என்ற நிலையில் 1ம் எதிர்மனுதாரர் அவரது லாரியை ம.சா.ஆ.2. ஆன மோட்டார் வாகன ஆய்வாளர்

அறிக்கையின் அடிப்படையில் 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டு மேற்படி காப்பீடு விபத்து சமயத்தில் ஊர்ஜிதத்தில் உள்ளதாலும், வாகனத்திற்கு ஏற்பட்ட இழப்பீட்டை காப்பீட்டாளர் என்ற முறையில் 2ம் எதிர்மனுதாரர் செலுத்தக் கடமைப்பட்டவர் எனவும் 1,3,4 எதிர்மனுதாரர்களைப் பொறுத்து மனுவை தள்ளுபடி செய்தும் பிரச்சனை 3க்கு தீர்வு காணப்படுகிறது.

9. <u>முடிவில்</u> மனுதாரருக்கு, 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் சேதாரத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.2,00,000/-ஐ, செலுத்த வேண்டுமென்றும், மனுதாரருக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையை 2-ம் எதிர்மனுதாரர் உத்தரவு தேதியில் இருந்து இரண்டு மாத காலத்திற்குள் இந்த தீர்ப்பாயத்தின் தென்காசி இந்தியன் வங்கிக் கிளை கணக்கு எண். 6456273001//ல் ஐ.எப்.சி. கோடு எண். IDIB000T009 – க்கு இ மாறுதல் மூலம் வைப்பீடு செய்துவிட்டு மேற்படி அந்த தகவலை இந்த தீர்ப்பாயத்திற்கு தெரிவிக்க வேண்டுமென்றும், மனுதாரரின் வாகனத்திற்கு சேதாரத்திற்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை என்பதால் மேற்படி தொகையை மனுதாரர் உடனடியாகப் பெற்றுக் கொள்ளலாம் என்றும், மனுதாரருக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகைக்குரிய முத்திரைக் கட்டணத்தை உத்தரவு தேதியில் இருந்து 10 தினங்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும், 1,3,4 எதிர்மனுதாரர்களைப் பொறுத்து மனுவை தள்ளுபடி செய்தும் உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022/ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14/ம் நாள் அவையறியப் பகரப்பட்டது. (ஒம்)என். மாரீஸ்வரி

கூடுதல் சார்பு நீதிபதி,

தென்காசி.

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்.</u>

| | | |
|---|---|---|
| 1, | 28.05.2017 | புதுக்கோட்டை காவல்நிலைய முதல் தகவல் அறிக்கை நகல் |
| 2, | -- | டி.என்.28.பி.பி.2985 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் |
| 3, | -- | டி.என்.76.எ.சி.8170- வாகனத்தின் பதிவுச்சான்று நகல் |
| 4, | -- | டி.என்.76.எ.சி.8170- வாகனத்தின் பாலிசி நகல் |
| 5, | -- | ஆசிக் ரசூல் பெயரில் உள்ள ஓட்டுநர் உரிமம் நகல் |
| 6. | -- | டி.என்.76.எ.ச.8170- வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் |
| 7. | -- | சர்வேயர் ரிப்போர்ட் |
| 8. | -- | சேதம்அடைந்த லாரியை காட்டக்கூடிய போட்டோ நகல்கள் |
| 9. | -- | கொட்டேசன் |
| 10. | -- | ரூ.5994/-க்கான பில் |

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் இல்லை.</u>

<u>மனுதாரர் தரப்பு சாட்சி.</u>

1.திரு.பீர்முகம்மது.

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி . இல்லை.</u>

(ஒம்)என். மாரீஸ்வரி
கூ.சா.நீ.
தென்காசி.

கூ.சா நீ. தென்காசி.

எம்.சி.ஓ.பி.எண்.260/2021

உத்தரவு வரைவு/நேரிய

நாள்..14.09.2022